# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

# மான்மின் தேவனுடைய அன்பிலும் வல்லமையிலும் ஐக்கியமானது!

## 2017 மான்மின் கோடை முகாமில் 37 நாடுகளிலிருந்து வந்த மக்கள் பங்குப்பெற்றனர்



2017 மான்மின் கோடை முகாம் செய்தியாளர் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுடன் ஜியோன்பக் மாநிலத்தின் மூஜூவில் உள்ள டியோகிசன் ரிசார்ட்டில் ஆகஸ்டு 7 முதல் 10 வரை நடைபெற்றது. அது GCN வழியாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. குறிப்பாக 37 நாடுகளிலிருந்து 1,100க்கும் அதிகமான பிஷப்கள், போதகர்கள் மற்றும் விசுவாசிகள் பங்குப் பெற்றனர்.

யோவான் 14:12 வசனத்தின்படி "வல்லமை" என்ற தலைப்பின்கீழ் கூட்டங்கள் நடைபெற்றது. அது நேரடியாக 13 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டது: ஆங்கிலம், சீனம், ஜப்பானியம், ரஷியம், ஸ்பானியம், பிரன்சு, தாய், தமிழ், இந்தி, டகலாக், இந்தோனேசியம், மங்கோலியம் மற்றும் வியாட்நாமியம் போன்றவையாகும்.

கொரிய தேசம் மற்றும் மற்ற நாடுகளிலிருந்து வந்திருந்த காதுகேளாத அங்கத்தினர்களுக்கென 9 சைகை மொழிகளில் மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டது. அவை கொரியம், மலேசியம், தாய், லேட்வியம், டானிஸ், ஃபாரோஸ், ஜெர்மனியம், ஆஸ்திரியம் மற்றும் சீனம் போன்ற சைகை மொழிகளாகும்.

### அற்புதங்கள்: ஒரு சூறாவளி அதன் திசையை மாற்றியது மற்றும் தட்பவெட்பநிலை கட்டுப்படுத்தப்பட்டது

முகாம் நடைபெறுவதற்கு முன்பு, நுரு என்ற தற்போதைய பருவக்காலத்தின் ஐந்தாவது சூறாவளி தென் கொரிய தேசத்தை நோக்கி வந்தது. வானிலை அறிக்கையாளர்கள் ஆகஸ்டு 7ம் தேதி தேசத்தின் சில பகுதிகளில் நேரடியான தாக்கத்தையும் மற்றும் சில பகுதிகளில் மறைமுகமான தாக்கத்தையும் அது உண்டாக்கும்; கொரிய தேசம் முழுவதிலும் பலத்த மழையை பெய்யப்பண்ணும் என்று கூறினர். ஆகஸ்டு 3ம் தேதி, சூறாவளி திசைமாறி அல்லது மடிந்துப் போகும்படி அறிவர். லீ அவர்கள் ஜெபித்தார். அதன்பிறகு, எதிர்பார்த்ததிலிருந்து அது கிழக்குப் புறமாக விலகிப்போகத் துவங்கியது, கொரியாவிற்கு எவ்வித பாதிப்பும் உண்டாகாதபடிக்கு இது நடைபெற்றது. ஆகஸ்டு 4ம் தேதி அவர் மீண்டும் ஜெபித்த பொழுது தீவிலிருந்து 100கிமீ தூரத்திற்கு அதன் திசை மாறியது, அது வலுவையும் இழந்தது.

ஆகஸ்டு 6ம் தேதி ஆராதனை வேளையில் அறிவர். லீ அவர்கள் அறிவித்தபடி முகாம் நடைபெற்ற இடத்தில் குளுமையான காற்று மற்றும் மேகங்கள் மூலமான அற்புதக் கிரியைகளினால் தட்பவெட்பநிலை 25 முதல் 26 டிகிரி செல்சியஸாக குறைந்தது. தேசிய அளவில் அனல்காற்று வீசும் என்று அரசாங்கத்தால் எச்சரிக்கை விடப்பட்டிருந்தது, ஆனால் முகாம் நடைபெற்ற மூஜூ இடம்மாத்திரம் அதற்கு விதிவிலக்காக இருந்தது. அனைத்து நிகழ்ச்சிகளும் முடிந்த பிறகு, ஆகஸ்டு 10ம் தேதி மீண்டும் தட்பவெட்பநிலை 30 டிகிரி செல்சியஸாக உயர்ந்தது. இதன்மூலம் தேவன் கோசேன் நாட்டில் எப்படி இஸ்ரவேலர்களை காத்தாரோ அதேபோல தங்களை பாதுகாத்த தேவனுடைய அன்பை உணரும் அனுபவத்தை மான்மின் அங்கத்தினர்கள் பெற்றுக் கொண்டனர்.

### பலத்த வல்லமை: வியாதிகள் சுகமடைந்தன, ஆவிக்குரிய உலகம் வெளிப்படுத்தப்பட்டது

கருத்தரங்கின் முதல்நாளில், அறிவர். லீ அவர்கள் "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24) என்ற தலைப்பின்கீழ் தேவனை குறித்து பிரசங்கித்தார்: தேவனால் கூடாதது ஒன்றுமில்லை; அவர் மனிதர்களின் இருதயத்தை அறிந்தவர்; அவர்கள் பூரண ஆவிக்குரிய இருதயத்தைப் பெற்றுக்கொண்டு மகா மகிமையில் வசிக்க விரும்புகிறார் என்று பிரசங்கித்தார்.

தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் பங்குப் பெற்றவர்கள் துதிகளை ஏறெடுத்து, மனந்திரும்பி ஜெபித்தனர். பிறகு, அறிவர். லீ பங்குப்பெற்றவர்கள் மற்றும் GCN இணையதள நேயர்களிலிருந்து எதிர்மறையான யோசனைகள், இருளின் ஆதிக்கங்கள் அகன்றுப்போகும்படி ஜெபித்தார். மேலும் அவர்களின் இருதயங்கள் புதிதாகவும், பதில்களைப் பெற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய விசுவாசத்தைப் பெறவும் ஜெபித்தார். அறிவர். லீ பரிசுத்த ஆவியானவரின் அக்கினியானது அனைத்து வகையிலான வியாதிகளை, ஊனங்களை, அனைத்து வகையான புற்றுநோய்களையும் மனநோய்களையும் காலம் இடத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் சுகமாக்கும்படி ஜெபித்தார்.

குறிப்பாக, இந்த முகாமில் அறிவர். லீ அவர்களின் வல்லமையான ஜெபமானது மெய்யான ஒளி மற்றும் சத்தத்தின்படி கிரியை செய்ததால், அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்டிருந்தவர்கள் விடுதலையானார்கள். அவர்கள் எப்படி விடுதலையாகிறார்கள் என்பதை பார்த்தபொழுது, எதிரியாகிய பிசாசும் சாத்தானும் இந்த கடைசி நாட்களில் எப்படி மக்களை பாவங்கள் செய்யும்படி தூண்டி, தற்கொலை செய்ய வைத்து நரகத்திற்குள் வழிநடத்துகிறார்கள் என்பதை விசுவாசிகள் அறிந்துகொண்டனர். தேவன் விசுவாசிகள் வசனத்தின்படியான ஒரு பயபக்திக்குரிய வாழ்வை வாழ வேண்டும் என்பதற்காக இந்த இருளின் உலகத்தை காண்பித்தார்.

கூடுதலாக, எலும்பு முறிவுகள், முக பக்கவாதம், நீர்க்கட்டு, தைராய்டு மற்றும் செவிட்டுத்தன்மை போன்ற தங்கள் வியாதிகளிலிருந்து அநேக மக்கள் சுகமடைந்தனர். மேலும் அநேக செவிடான அங்கத்தினர்களும் செவித்திறனைப் பெற்றுக் கொண்டனர்.


தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# பிதாவாகிய தேவனுடைய அன்பு

**"தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்."**
**(1 யோவான் 4:16)**

சகல ஜாதி மக்களையும் இரட்சிக்கும்படிக்கு தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார். தேவனுடைய சித்தத்தை பின்பற்றி, இயேசுவும் இந்த பூமிக்கு வந்து, தாம் பாவமில்லாதவராய் இருந்தாலும் மரச்சிலுவையிலே மரித்தார், அங்கே இரட்சிப்பின் வழி திறந்தார். அதனால் அவரை விசுவாசிப்பதால் யாரானாலும் பரலோகம் அடையலாம். இந்தப் பதிப்பிலே, நாம் நமக்காக தேவன் பாராட்டிய அன்பை தியானிக்கப்போகிறோம்.

## முதலாவது, தேவன் மிக நீண்ட காலமாக பொறுமையோடிருந்தார்

என்றென்றும் தம்முடைய அன்பை பகிர்ந்து கொள்ளக்கூடிய மெய்யான பிள்ளைகளை பெறும்–படியாக தேவன் ஆதாமை சிருஷ்டித்தார். தேவன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வாழ்வின் வழியை மக்களுக்கு போதிக்கும்படி செய்தார். ஆனால் அவர்களோ தேவனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். இருப்பினும் தேவன் அவர்களை இன்னமும் விட்டுவிடாதிருக்கிறார்.

2 பேதுரு 3:8–9ல் வாசிக்கிறோம், "பிரியமா–னவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்." தேவன் மிக நீண்ட காலமாக காத்திருக்கிறார்.

அவர் ஆயிரம் ஆண்டுகள், மற்றொரு ஆயிரம் ஆண்டுகள், இன்னும் மற்றொரு ஆயிரம் ஆண்டுகள் காத்து கொண்டிருக்கிறார். அவர் ஆறாயிரம் ஆண்டுகளாக காத்திருந்தார். அவர் தம்முடைய இருதயத்தைப் புரிந்துக்கொள்ளக்கூடிய மெய்யான குமாரர் குமாரத்திகள் என்றாகிலும் ஒரு நாள் முன்வருவார்கள் என்று தொடர்ந்து ஊக்கமாக எதிர்பார்த்து நம்பிக்கொண்டிருந்தார். ஆவிக்குரிய பொறுமையாய் இருத்தல் என்பது பொறுமையாய் இருப்பதால் வருகிற எல்லா பின்துயர்ச்சிகளையும் தாங்கிக்கொண்டு கனி இறுதியாக விளையும் வரையில் விலைக்கிரயம் கொடுப்பதாகும்.

தேவனும்கூட பின்துயர்ச்சிகளை தாங்கிக் கொண்டு விலைக்கிரயத்தை செலுத்துவதற்கு தாங்கொன்னா வேதனையில் கஷ்டப்பட்டார். ஒரு நேரம் அவர் முழு உலகத்தையும் ஜலப் பிரளயத்தினால் தண்டிக்க வேண்டியிருந்தது. தாம் மிகுந்த அன்போடு சிருஷ்டித்த இந்த உலகத்தை அவர் தண்டிக்க வேண்டியிருந்தபோது, பூமியை ஜலப்பிரளயமாக்கிய மழையைப்போல அவருடைய இருதயத்திலிருந்து திரளான கண்ணீர் பெருகி ஓடியது.

தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலர்கள் தமக்கு துரோகம் செய்து விக்கிரகங்களை வழிப்படுவதை பார்க்க வேண்டியிருந்தது. அவர் அவர்களுடைய அழிவைப் பார்க்க வேண்டியிருந்தது. அவர் தம்முடைய ஒரேபேறான குமாரன் மனி–தர்களால் அசட்டைப் பண்ணப்பட்டு இறுதியில் சிலுவையில் அறையப்படுவதையும் பார்க்க வேண்டியிருந்தது.

தேவன் தெய்வீகமாக இருப்பதால் அவர் அப்படிப்பட்ட காரியங்களை எளிமையாக எடுத்துக் கொள்ள முடியுமென்பதல்ல. அவர் மனுஷீகமாகவும் இருக்கிறபடியால், அவர் வேதனை, துயரம், மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்தை உணருகிறார். மேலும் அவர் நற்குணமாக இருக்கிறபடியால், அவர் அப்பேர்பட்ட உணர்வுகளை மற்ற எவரையும் விட அதிக தீவிரமாக உணருகின்றார். அவர் எப்போதெல்லாம் உலகம் பாவத்தினாலும் மக்கள் தீமையினாலும் கறைப்படுவதைப் பார்க்கிறாரோ அப்போதெல்லாம் தாங்கொன்னா வேதனையடைகிறார்.

இருப்பினும் அவர் இன்னமும் காத்துக்கொண்–டிருக்கிறார். மானுட வேளாண்மை முடியும் நேரத்தில் நிச்சயமாக மெய்யான பிள்ளைகள் இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு அவர் மிக நீண்ட காலமாக இந்தக் கணப்பொழுது வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்.

உங்களால் சுவிசேஷத்தை உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியாதபோது, உங்களால் போதிய அளவில் சீக்கிரமாக பாவங்களை களைந்துப்போட முடியாத போது, தேவன் உங்களுக்கு சில வாய்ப்புகள் மட்டுமே கொடுத்து பின்பு உங்களை விட்டுவிட்டிருந்தால் உங்களுக்கு என்னவாகி இருக்கும்? உங்களில் முக்கால்வாசிபேர் அநேக–மாக இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது. உங்கள்மேல் மிகவும் நீடிய பொறுமையாய் இருக்கிற பிதாவின் அன்பினாலேதான் நீங்கள் இன்று உள்ள வண்ணமாக இருக்கிறீர்கள் என்பதை நினைவு கூருவீர்கள் என நம்புகிறேன்.

## இரண்டாவதாக, தேவன் நம்மை கைவிடாமல் நம்மை மாற்றியிருக்கிறார்

யாத்திராகமத்தின் காலக்கட்டத்தில், இஸ்ரவேல் புத்திரர்கள் தேவனுடைய வல்லமையான கிரியைகள் பலவற்றைக் கண்டார்கள். அவர்கள் பத்துவாதைகள், செங்கடல் இரண்டாகப் பிரிந்தது, கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட்டு வந்தது போன்றவைகளை கண்டார்கள். வானத்திலிருந்து மன்னாவும் காடையும் வர புசித்தார்கள்.

ஆனால் பிரச்னை என்னவெனில் அவர்கள் பல அனுபவங்களைப் பெற்றும்கூட அவர்களது இருதயம் மாறவில்லை. அவர்கள் தேவனுடைய மகிமையைக் கண்டபோது, அவர்கள் களிகூர்ந்து அவரைத் துதித்தார்கள். ஆனால் கஷ்டங்கள் இருந்தபோது, அவர்கள் உடனடியாக முறுமுறுத்து, தொடர்ந்து மீண்டும் மீண்டும் கீழ்ப்படியாமல் போனார்கள். இறுதியாக, தேவன் அவர்களை கைவிட்டார், ஆனால் மோசேயோ தேவனுடைய மன்னிப்பை கொண்டு வருவதற்கு தன் உயிரைப் பணயம் வைத்தான்.

அந்நேரத்தில், மோசே தேவனுடைய இருதயத்தை மிக நன்கு புரிந்திருந்தபடியால், அவன் தேவனுடைய கோபத்தைக் கண்டபோதும் தைரியமாக தேவனிடம் அவர்களை மன்னிக்கும்படி கேட்டான். அதாவது, தேவனுடைய இருதயத்தின் ஆழமான பகுதி என்னவென்றால் அவர் அவர்களை இரட்சிக்க விரும்புகிறார். மோசே தேவனுடைய இந்த இரு–தயத்தை நன்கு அறிந்திருந்தான். ஒரு ரீதியில், மோசே எல்லாவற்றையும் புதிதாய் துவங்குவது எளிமையாயிருந்திருக்கக்கூடும். நீண்ட காலமாக அடிமைகளாயிருந்து வணங்கா கழுத்துள்ளவர்களை நடத்துவது எளிமையான வேலை இல்லை. முழுவதும் புதிய குழுவான மக்களை உருவாக்கி அவர்களுக்கு பிரமாணங்களை கற்றுத் தந்து அவர்களை பயிற்றுவிப்பது எளிமை.

பின்வரும் ஒப்புமானத்தை கருத்தில் கொள்வோம். நீங்கள் ஒரு குமாரனை பெற்றீர்கள். அதிக பராமரிப்புடன் அவனை வளர்க்கிறீர்கள். பிற்பாடு நீங்கள் அதிர்ச்சி தரக்கூடிய செய்தி ஒன்றை கேட்கிறீர்கள். அவனுக்கு குணமாக்க முடியாத உள் ஊனம் இருக்கிறது. மேலும் மருத்துவர் இப்பேர்பட்ட சிறுவர்கள் பெரியவர்களுக்கு முன்பே மரித்துவிடுகின்றனர் என்று சொல்கிறார். இப்போது, நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள், "அவன் குணமாக்கப்பட முடியாது, அதனால் எதற்காக இப்பேர்பட்ட பிள்ளையை நாம் வளர்த்து கஷ்டப்படவேண்டும்? நாம் வேறு பிள்ளைகளை பெற்று அவர்களை வளர்க்கலாம்! என்று உங்கள் மகனை அப்படியே விட்டு விடுவீர்களா? உண்மையான பெற்றோரால் அப்படிச் செய்யவே முடியாது. எளிய சாத்தியக் கூறுகள் இருக்குமானால், நீங்கள் உங்கள் குடும்ப சொத்து அனைத்தையும் விற்றுக்கூட உங்கள் மகனை குணமாக்க விரும்புவீர்கள்.

தேவனுடைய இருதயமும்கூட அப்படிதான் இருக்கிறது. அவர் நீதிக்குள் எப்படியாகிலும் சகல ஜனங்களை இரட்சித்து அவர்களை மாற்ற விரும்புகிறார். ஒரு மனிதர் மாறுவதற்கு தாமதமாயிருந்தாலும்கூட, அவனைச் சுற்றியுள்ள மக்கள் அவனைக்குறித்து அசௌகரிகம் அடைந்திருப்–பார்கள். ஆனால் தேவன் அவனை ஒருபோதும் கைவிடவில்லை. அவர் அவன் மாறுவதற்கு ஏதுவாக முடிவுபரியந்தம் கிருபையளித்துள்ளார். நாம் இன்னமும் புதிய எருசலேமை நோக்கியும் இரட்சிப்பை நோக்கியும் ஓடுவதற்கு தேவனுடைய அன்பே காரணம்.

## மூன்றாவதாக, தேவன் தம்அன்பில் நாம் மகிமையின் கனிகளை விளைவிக்கும்படி செய்துள்ளார்

யோவான் 17:24 சொல்கிறது, "பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்." இயேசுவானவர் இந்த உலகத்திற்கு நம்மை இரட்சிப்பதற்காக மட்டும் வரவில்லை. நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிப்பை பெற வேண்டும் என்பது உண்மைதான், ஆனால் இறுதியாக நாம் அவருடைய உண்மையான மெய்யான பிள்ளைகளாக அவரை பிரதிபலித்து மாறி அவருடன் மகிமையை சேர்ந்து அனுபவிக்க வேண்டும் என விரும்புகிறார்.

பரதீசுக்காகிலும் நம்மால் செல்ல முடியும் என்ப–தற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்பது உண்மைதான். நரக அக்கினியிலிருந்து சற்றே தப்புவிக்கப்பட்டோம் என்பதினால் நாம் எத்தகைய உணர்வுள்ளவர்களாயிருப்போம். ஆனால் தேவன் நமக்கு கொடுக்க விரும்புவது இயேசுவுக்கு அருகாமையிலிருந்த சிலுவை கள்ளன் நுழைந்த பரதீசு அல்ல (லூக்கா 23:43). அவர் நாம் சூரியனை போன்ற மகிமையில், தேவ மகிமை நிறைந்த புதிய எருசலேமில் நாம் வாழ விரும்புகிறார் (வெளி 21:10–11).

அவரை பிரதிபலிக்கக்கூடிய மெய்யான பிள்ளைகளாக நாம் மாறி ஆண்டவரோடு புதிய எருசலேமின் மகிமையை நாம் அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் விளைவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிற கனி இதுவே. இன்று அநேக விசுவாசிகள் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் ஒவ்வொரு வருக்கும் கொடுக்கப்படுகிற பரம வாசஸ்தலங்கள் நபருக்கு நபர் வித்தியாசமாயிருக்கும் (1கொரிந்தியர் 15:4). இதன் காரணம் வித்தியாசமான விசுவாச அளவுகள் இருக்கின்றன. ஒவ்வொருவருடைய விசுவாசத்தின் அளவுக்கு ஏற்ப பரலோகத்தில் அவர்களது வாசஸ்தலங்களும் மகிமையின் கனியும் வித்தியாசமானதாக இருக்கும் (ரோமர் 12:3).

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவனுடைய அன்பு, நீடிய பொறுமையின் அன்பு. நம்மை கைவிடாமல் நாம் மாறுகிற வரை காத்திருக்கிற அன்புதான் அது. நீங்கள் தேவனுடைய இருதயத்தின் ஆழத்தை உணர்ந்து, பாவங்களையும் தீமைகளையும் சீக்கிரமாக களைந்துப்போட்டு, ஆண்டவரை பிரதிபலிக்கிற தேவனுடைய மெய்யான பிள்ளைகளாய் மாறுவீர்கள் என நம்புகிறேன். இப்படிச் செய்வதால் நீங்கள் புதிய எருசலேம் நகரத்திற்குள் நுழையும்படி ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)..." (அப். 17:25)
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12)

## மாபெரும் இயற்கை அழகோடு நடைபெற்ற கிருபையின் திருவிழா

# “பதில்களும் ஆசீர்வாதங்களும் பொங்கி வழிந்தன!”

மான்மின் கோடை முகாமில், கொரியா மற்றும் உலகமெங்கிலுமிருந்து மான்மின் அங்கத்தினர்கள் கூடி வந்து தேவனுடைய பதில்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றனுபவித்தனர். முந்தைய முகாம்களில் சுகம் பெற்றவர்களின் சாட்சியை பகிர்வதால் தேவனுக்கு இன்னும் அதிகமாக நன்றி செலுத்துவோம்.

### கோடை முகாம் 2013



## “என் மகளின் செவி திறந்தது!”

கண்காணியை ஜின்ஜர் கின் பிராண்ட், வயது 33,
பெனாங் மான்மின் செவிடர்களுக்கான சபை, மலேசியா

எனது கணவரும் நானும் செவிடர்கள். எங்களது மகள் செவிடாக இருக்கக்கூடாது என நாங்கள் ஊக்கமாக விரும்பினோம். ஆனால் ஏப்ரல் 2013, மருத்துவ பரிசோதனை எங்களது மகள் ஸ்கைலாவும் செவிடு என காட்டியது. நாங்கள் மிகவும் துக்கமாயிருந்தோம், ஆனாலும் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தை நாங்கள் பெற்றால், அவள் சுகமடைய முடியும் என்பதை விசுவாசித்தோம். அதனால் நாங்கள் மனமுடைந்து போகாமல் வாஞ்சையோடு மான்மின் கோடை முகாமிற்காய் ஆயத்தமானோம்.

ஜூலை 29, 2013 அன்று, நாங்கள் கொரியா வந்தோம். தானியேல் ஜெபக்கூட்டத்தின் நேரத்திலே ஸ்கைலா தீடீரென்று சத்தமிட்டாள். இங்கும் அங்கும் பார்த்தாள், அதிகமாக அவள் அசைந்தாள். பொதுவாக அவள் எப்போதும் அமைதியாயிருப்பாள். ஆகஸ்டு 2 அன்று, அவள் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாள். அவளது விரல்களால் அவளை வெளிப்படுத்த தொடங்கினாள்.

ஆகஸ்டு 5, 2013 அன்று, மான்மின் கோடை முகாமில் கருத்தரங்கில் பங்குப்பெற்றோம். செய்தி கொடுத்தப் பின்னர், தலைமை போதகர் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தார். அப்போது எங்களுக்கு ஒரு அற்புதம் நடந்தது. எனது மகளிடம் கேள்வி கேட்கப்பட்டபோது அவள் தலை அசைத்தாள். அவளுடைய பெயர் அழைக்கப்பட்டபோது, தன்னை அழைத்தது யார் என்பதை அறிய அவள் சுற்றி முற்றி பார்த்தாள். நான் மிகவும் சந்தோஷப்பட்டேன், நேரடியாக மேடைக்குச் சென்று அவளது சுகத்திற்கு கண்ணீரோடு சாட்சி பகிர்ந்தேன். ஹலேலூயா!


With Skyla in 2017

ஸ்கைலா இப்போது ஐந்து வயதுள்ளவாயிருக்கிறாள். ஆண்டவருக்குள்ளாக நன்கு சமார்த்தியமும் விவேகமுமுள்ள பிள்ளையாக வளருகிறாள். மேலும், இந்த வருட கோடை முகாமிலும்கூட, முன்பைக் காட்டிலும் இப்போது எனது இடது காதில் தெளிவாக கேட்க முடிகிறது. ஜீவனுள்ள தேவனுக்கு எல்லா நன்றியையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

### கோடை முகாம் 2014



## “வாஞ்சையோடு மீண்டும் பிரான்சிலிருந்து கொரியாவுக்கு வந்துள்ளேன்!”

சகோதரி பியன்ரேயன் லிலேயு, வயது 46,
இல்–தே–பிரான்ஸ் மான்மின் சபை

பரிசுத்த சுவிசேஷத்தை விரும்புகிற மக்களுடன் பிரன்சு, பாரிசில் GCN வழியாக மான்மின் மத்திய திருச்சபையின் ஆராதனையில் சேர்ந்தேன் (www.gcntv.org). கொரியாவிற்கு வரும்போதெல்லாம், நான் ஆச்சரியமான ஆசீர்வாதங்களைப் பெற்றேன்.

ஜூன் 2014ல், நான் தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ அவர்களுடன் கைகுலுக்கியபோது, நான் ஒடிட்டிஸ் மீடியா, சீல் வடிதல் மற்றும் பல் ஈறு பாதிப்பிலிருந்து சுகம் பெற்றேன். அதே வருடம் ஆகஸ்டு மாதத்தில் நான் பயங்கரமான வெரிகோஸ் வெயின்லிருந்து மான்மின் கோடை முகாமின்போது சுகம் பெற்றேன். நான் கால் கட்டுகள் மற்றும் வேதனையை மரத்துப்போகச் செய்கிற மாத்திரைகளை அதற்காக ஐந்து ஆண்டுகள் எடுத்து வந்தேன். அது அவ்வளவு பயங்கரமாயிருந்தது. அதை, மறைப்பதற்காக நான் நீண்ட ஆடைகளை போட்டுக் கொள்ளவில்லை. ஆனால் நான் அதிலிருந்து பரிபூரண சுகம்பெற்றேன். ஹலேலூயா!

மான்மின் கோடை முகாம் 2015ல், பரிசுத்த ஆவியின் அக்கினி என்மேல் வந்தது. என் சரீரம் முழுவதும் அனலாய் உணர்ந்தேன். எனது தலையிலுள்ள பொடுகு தொல்லை மற்றும் தோல் அலர்சியிலிருந்து சுகம்பெற்றேன். ஒன்பது மாதங்களாக அது மிகவும் அரிப்பெடுத்துக்கொண்டே இருந்தது. எனது தலையில் கொப்புளங்கள், இரத்தம் மற்றும் பக்குகள் அவைகளை மூடியிருந்தது. ஆனால் அவைகள் முகாமில் சுத்திகரிக்கப்பட்டன.


At Muju in 2017

தேவன் தமது கிருபையை என்மேல் ஊற்றியபடியால் பிரான்சுக்கும் கொரியாவுக்கும் உள்ள தூரம் தொலைவான ஒன்றாக எனக்குத் தெரியவில்லை. எனக்கு அபரிதமான கிருபை தந்த தேவனுக்கு எல்லா நன்றியையும் மகிமையையும் ஏறெடுக்கிறேன்.

### கோடை முகாம் 2015



## “எனது மகன் மனஇறுக்கத்திலிருந்து சுகம்பெற்றான்!”

கண்காணி ஜூனோக் கிம் வயது 41,
மாகாணம் 12, மான்மின் மத்திய சபை

எனது மகன் 20 மாதங்களாயிருந்தபோது முதல்நிலை அறிவார்ந்த இயலாமை உள்ளது என்று கண்டறியப்பட்டான். இதன் காரணம் மருத்துவரீதியாக அறியப்படாதிருந்தது. ஆனால் திருச்சபையில் ஆவிக்குரிய ரீதியில் அது பெற்றோர்களின் பாவங்களால் தான் ஏற்படுகிறது என்று கேட்டேன். பெற்றோர்கள் பரிசுத்தமாகும்போது, அவர்களது பிள்ளைகள் சுகமடைய முடியும். எனது விசுவாச வாழ்க்கையை நான் சற்று திரும்பிப் பார்த்தேன். அந்நேரத்தில், நான் பிசியான தொழில் அட்டவணையை சாக்காக பயன்படுத்தி ஆண்டவருடைய நாளை ஆசரிக்கவில்லை.

எனது மனைவியுடன் தானியேல் ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெற ஆரம்பித்தேன். ஒவ்வொரு நாள் இரவும், பாவங்களை அறிக்கைச் செய்தேன். ஒவ்வொரு ஆராதனை வேளையிலும் என் மகனை இருதயத்தில் வைத்து வியாதியஸ்தர்களுக்கான தலைமைப் போதகருடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். பிற்பாடு, எனது மகன் எங்களுடன் கண்ணுக்கு கண் பார்த்து பேச ஆரம்பித்தான், அவனால் முடியவில்லை என்றபோதிலும் அவ்விதமாக மாறினான். நான் எந்தளவாய் விசுவாசத்தை மீட்டெடுத்தேனோ அந்தளவாய் என் மகன் தேர்ச்சி பெற்றான். துவக்கநிலை பள்ளிக்குச் செல்வதற்கு முன்பாக எனது மகன் மனஇறுக்கத்திற்கான பரிசோதனையின்கீழ் சென்றான். முடிவுகள் அவன் பேச்சு வழி வெளிப்படுத்தும் ஆற்றலை தவிர மற்றெல்லா பகுதியிலும் சீர்நிலையில் உள்ளான் என்பதை காட்டியது. அவனது கணித ஆற்றல் மற்றும் மண்டலம் சார்ந்த ஆற்றலும் சீர்நிலையில் உள்ள மாணவர்களை காட்டிலும் சற்று சிறந்ததாகவே இருந்ததாக கண்டு மருத்துவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

ஆகஸ்டு 2015ல், அவன் மான்மின் கோடை முகாமின்போது எல்லாப் பகுதியிலும் தேர்ச்சிப் பெற்றான். நான் மேடைக்கு அவனுடன் சென்று அவனது சாட்சியை பகிர்ந்தேன். எனது மகன் மின்சியோங்கின் கற்கும் ஆற்றல் வளர்ச்சிப் பெற்று கொண்டிருக்கிறது. அவன் பிறருடைய இருதயத்தைப் புரிந்துகொண்டு நல்ல ஞானமுள்ள பிள்ளையாக வளர்ந்து கொண்டிருக்கிறான். எல்லா நன்றியையும் மகிமையையும் தேவனுக்கு செலுத்துகிறேன்.


At Muju in 2017

### கோடை முகாம் 2016



## “விழித்திரை நாளம் முறிவிலிருந்து சுகமாக்கப்பட்ட பின் புதிதானேன்!”

கண்காணி சாங்ஹோமா, வயது 55,
சீன மாகாணம், மான்மின் மத்திய சபை

நான் தூசு படிந்த நல்ல சூழல் இல்லாத இடத்தில் வேலைப் பார்த்து வந்தபடியால், எனது கண்பார்வை மோசமாகிக் கொண்டு இருந்தது. அதேநேரம், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, பொருட்கள் தீடீரென்று எனது இடது கண்ணில் மங்கலாக தெரிந்தது. எனது பார்வையின் நடுவில் கருமையான நீல கோடு தெரிந்தது. கண்களில் மூலமாக என் பார்வையில் மூன்றில் இரண்டு பங்கான பொருட்களை மாத்திரமே பார்க்க முடிந்தது. எனது விழித்திரையின் இரத்தநாளம் முறிந்து விட்டது என்று கேள்விப்பட்டேன். மருத்துவர் என்னை அறுவை சிகிச்சை செய்யும்படி கேட்டுக்கொண்டார். அறுவை சிகிச்சை தோல்வியானால் கண் முற்றிலுமாய் குருடாகி விடுமென பயந்தேன். அந்தப் பயத்தினாலே, அது சௌகரிகமாக இருந்தாலும் கண் கோளாருடன் வாழ்ந்து வந்தேன். பின்பு, எனது இடது கண்களில் வேகமாக பார்வை மங்கி மோசமானது. எனது அநுதின வாழ்வில் எனக்கு பல கஷ்டங்கள் இருந்தன.

அதே நேரத்தில், நான் 2016 மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற்றேன். தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில், நான் மனந்திரும்புதலின் பாடலை பாடினேன். நான் கண்களை மூடி உலகத்தை சிநேகித்து தேவனுடைய வார்த்தையின்படி வாழாமலிருந்ததை அறிக்கைச் செய்தேன். நான் அதிகமாக கண்ணீர் சிந்தினேன். நான் தலைமை போதகருடைய ஜெபத்தைப் பெற்றபோது, என் கண்ணீரை துடைக்க கண்களைத் திறந்தேன். பின்பு, நானே வியப்பில் ஆழ்ந்தேன். எனது இடது கண் மூலமாய் பார்க்கப்பட்ட கருங்கோடு மறைந்துவிட்டது. அதனால் நான் பொருட்களை தெளிவாகப் பார்க்க முடிந்தது! ஹலேலூயா!

எனது கண் பார்வை 0.3/1.5 ஆக முன்பு இருந்தது. ஆனால் இப்போது பார்வை 1.5/1.5 ஆக தேர்ச்சி பெற்றுள்ளது. எல்லாவற்றையும் என்னால் துல்லியமாக பார்க்க முடிகிறது. மான்மின் அங்கத்தினராக நான் மாற்றத்தின் கனியாவேன் என்று நம்புகிறேன். நான் எல்லா நன்றியையும் மகிமையையும் அன்பின் தேவனுக்குச் செலுத்துகிறேன்.


In 2017

# மான்மின் விளையாட்டு போட்டி! குளிர்ந்த காற்று நம் சரீரத்தையும் இருதயத்தையும் புத்துணர்ச்சியாக்கியது!

2017 மான்மின் கோடை முகாமின் இரண்டாவது நாளில், மான்மின் விளையாட்டு போட்டி நடைபெற்றது. சீனம் வெளி–நாட்டவர் உள்ளடங்கிய முதலாம் மாகாணம், இரண்டாவது மாகாணம், மூன்றாவது மாகாணம் மற்றும் கிளைசபைகளின் அணியினர் போட்டியிட்டனர்.

அவர்கள் 10 போட்டிகளில் 24 தங்கப்பதக்கத்திற்காக போட்டியிட்டனர்: கயிறு இழுக்கும் போட்டி, பலூன் பந்து உருட்டும் போட்டி, பேட்மிண்டன், 100மீ ஓட்டம், கைப்பந்து, மினி கால்பந்து, நீண்டதூர ஓட்டம், மல்யுத்தம், கைமல்யுத்தம் மற்றும் தொடர் ஓட்டப்பந்தயம்.

இந்த முறை கிளை சபை அணியினர் 12 தங்கப்பதக்கத்தை வென்று இறுதி வெற்றியாளரானார்கள். உற்சாகமூட்டும் கலைநிகழ்ச்சிக்கான பரிசு மூன்றாம் மாகாணத்திற்குச் சென்றது. MVP ஆண் மற்றும் பெண்களுக்கான விருது முறையே கெட்டியுபி ஜெக்கப் மற்றும் மிவெண்டா கெத்ரினுக்குச் சென்றது. இருவரும் நைரோபி மான்மின் பரிசுத்த திருச்சபையை சார்ந்தவர்கள்.

தேவன் சூரியனை மேகங்களினால் மறைத்து, குளிர்ந்த தென்றல் காற்று வீசச் செய்ததால், விசுவாசிகள் சந்தோஷமாக விளையாட்டு நிகழ்ச்சிகளை அனுபவித்தனர். விசுவாசிகள் மற்ற அணியினர் வெற்றி பெற்றபொழுது களிகூர்ந்தனர், ஒவ்வொருவரும் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். அவர்கள் தேவனுடைய அன்பிற்குள்ளாக ஒற்றுமை, நற்குணம் மற்றும் சமாதானத்தோடு போட்டியிட்டனர்.



# அக்கினிமுகாம் துதி ஆராதனை!
# தேவனை துதித்தபொழுது பரிசுத்த ஆவியின் அக்கினி இறங்கியது

மூன்றாம் நாளில், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அக்கினிமுகாம் துதி ஆராதனையை போதகர் யூரிதோ மற்றும் சகோதரி ஜியோங்னம் கிம் போன்றவர்களோடு தலைமை தாங்கி நடத்தினார். கலைநிகழ்ச்சி குழுவினர் 'துதி ஆராதனை' (துணைத்தலைப்பு, "நேசிக்கிறேன், மான்மின் மந்தைகளே') என்ற தலைப்பின்கீழ் நடத்தினார்கள். நிகழ்ச்சியின் வேளையில், புதிய எருசலேமில் உள்ள மேய்ப்பரின் மாளிகைக்கு நேராக வாஞ்சையோடு நடத்திச் செல்கின்ற தங்கள் மேய்ப்பரின் தியா–கத்தையும் அன்பையும் தங்களுக்குள் விசுவாசிகள் நினைவு கூர்ந்தனர். இந்த நிகழ்ச்சியில் மேய்ப்பரின் கனிகளாக மாறின மக்கள் புதிய எருசலேமில் உள்ள மாளிகையில் மேய்ப்பரோடு தேவனை துதித்து ஆராதிப்பது போன்ற வெளிப்பாடு காண்பிக்கப்பட்டது.

மேடையானது இரண்டு பகுதியை கொண்டிருந்தது: உள்புறம் மற்றும் வெளிப்புறம். அதாவது அவை உலகம் மற்றும் மேய்ப்பரின் மண்டலம், இருள் மற்றும் வெளிச்சத்தைப் பிரதிபலித்தது. திரையும் இரண்டாக அமைக்கப்பட்டிருந்தது. மற்றொரு திரை சிலுவை வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. அது தேவனுக்கும் நமக்குமான பாலம் என்ற அடையாளத்தோடு அமைக்கப்பட்டிருந்தது.

சில சிறப்பு கலைநிகழ்ச்சிகளும் காண்பிக்கப்பட்டது. மணல் அனிமேஷன் நிகழ்ச்சியில் முழு உலகத்தையும் மறு சிருஷ்டிப்பின் வல்லமையால் ஆதாயப்படுத்துகிற மான்மின் சபையின் தரிசனத்தை வெளிப்படுத்தியது. கலைக்குழுவின் உறுப்பினர்கள் "சகல தேசங்களின் சகல ஜனங்கள்" என்ற தலைப்பின்கீழ் நடன நிகழ்ச்சிகளை காண்பித்தனர்.

நிகழ்ச்சியின் ஆரம்பத்தில், தலைமை போதகர் அறிவர். லீ பரிசுத்த ஆவியானவரின் அக்கினி இறங்கி, பங்குப் பெறுகிறவர்களுக்கு சுகம், பதில்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் கிரியைகளை தரும் என்று சொன்னார். மேலும் அவர் புதிய எருசலேமிற்கான நம்பிக்கையினால் நிரப்பப்படவும், அதிக ஊக்கத்தோடு கிறிஸ்தவ ஜீவியத்தில் ஓடவும் ஜெபித்தார். அவர்கள் பாடல் நடனத்தோடு தங்கள் இருதயங்களை ஏறெடுத்தனர்.




GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com